செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


**பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை: 128** **நாள்: 19.06.2026**

**மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பப் புலம்**

**நடத்தும்**

# தமிழ் பிராமி கற்பித்தல்
# (Teaching of Tamil Brahmi)

**இணையவழிப் பயிலரங்கம் – ஏழு நாள்கள்**

**Online Workshop - Seven day**

**பயிலரங்கம் – 9**

**(30.06.2026 – 06.07.2026)**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் மொழியின் வரிவடிவம் சித்திர எழுத்துகள் என்ற நிலையில் தோன்றி, பின்னர் ஓரொலிக்கு ஓர் எழுத்து என்ற முறையில் அமைந்த பிராமி வரிவடிவமாக உருவாகி, வட்டெழுத்து, பல்லவ கிரந்த எழுத்துகள் எனப் பல பரிமாணங்களைக் கடந்து இன்றைய வடிவத்தைப் பெற்றிருக்கின்றது. காலந்தோறும் எழுத்துகளின் வடிவங்கள் மாறி வந்திருக்கின்றன என்பதற்குக் கல்வெட்டுகள் ஆதாரமாக உள்ளன என்பது வெள்ளிடைமலை. வரலாற்று ஆவணமாகப் பண்டைத் தமிழரின் அறிவு மரபின் வெளிப்பாடாகத் திகழும் கல்வெட்டுகளை வாசிப்பது அனைவராலும் இயலாது. அந்தந்தக் காலகட்டத்தில் தோன்றிய எழுத்துகளை முறையாகக் கற்றால் மட்டுமே தமிழ்மொழியின் எழுத்துருக்களை அறிதல், வாசித்தல், புரிந்துகொள்ளல் என்னும் கற்றல் அனுபவத்தைப் பெற இயலும். கல்வெட்டு வாசிப்பின் ஊடாகத் தமிழின் தொன்மை, அதன் வளர்ச்சி, தமிழரின் வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகளை உணர்ந்து கொள்ளவும், தமிழக வரலாற்றைப் புரிந்து கொள்ளவும் இயலும். இவற்றை உணர்ந்து கொள்ள முதலில் கல்வெட்டு எழுத்துகளை அறிந்து, வாசிக்கும், புரிந்து கொள்ளும் கற்றல் அனுபவத்தைப் பெறுதல் இன்றியமையாதது.

இத்தகைய அனுபவத்தைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பப் புலம் **தமிழ் பிராமி கற்பித்தல்** என்னும் பயிலரங்கினைத் நடத்தவிருக்கின்றது.

இப்பயிலரங்கு 30.06.2026 முதல் 06.07.2026வரை ஏழு நாள்கள் இணையவழியில் பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை நடைபெறவுள்ளது. இணையவழி நடைபெறும் பயிலரங்கில் கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கிறோம். இத்துறை சார்ந்த வல்லுநர் பயிற்றுரை வழங்கவுள்ளார்.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் வருமாறு:

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை – 250பேர்
- பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 30.06.2026 முதல் 06.07.2026 வரை ஏழு நாள்கள்
- பயிலரங்கு நேரம்: பிற்பகல் 3.00 முதல் 4.30மணி வரை நடைபெறும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/BTRrGRtUtUpHCZDx7 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

- விண்ணப்பப் படிவங்கள் (Google Form) வந்துசேர வேண்டிய இறுதிநாள் 25.06.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 26.06.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பெறும்.

- இப்பயிலரங்கில் பங்கேற்போர் ஏழு நாள்களும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். அமர்வில் தாமதமாகக் கலந்துகொள்ளக் கூடாது. தாமதமாகவோ, இடைநிற்றலோ இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிடவேண்டும்.

**இயக்குநர்**